

கொக்குவில் மேற்கு
குமரன் குடி கொண்ட மணியர் பதியின்
வளமுயர் தொல்குடி சார்

# திருமதி புவனேஸ்வரி கார்த்திகேசன்

அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருகை : 9.3.1936**

தேவி புவனேஸ் வரி கார்த்திகேசிந்தப்
பூவில் அவதரித்த பொற்றோதி – தாவில்லாப்
பத்தொன் பது முப்பத் தாறின் மூன் றாம் மாதம்
உத்தம நா ளாம் ஒன் பது !



**செல்கை : 1.3.1993**

இருபதாம் நூற்றாண்டின் தொன்னூற்று மூன்றாம்
வருடத்தி லே மூன்றாம் மாதம் – வருகும்
முதல் நாள் புவனேஸ் வரி கார்த்தி கேசன்
சிதையிலே சேர்ந்த தினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம் :

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

## வரன் முறை கிளர்த்தல்

இகமெல்லாம் போற்றும் இலங்கை நன்னாட்டின்
வளமெல்லாம் பொலியும் வட புலத் தமிழகத்து
ஊர்களில் முதன்மை உழவுத் தொழிலிற்
பேர் பெறும் பழைமைப் பெருமைக் குரியது
கொக்குவில் என்னும் தொல்லூர்! கொக்குவில்
மேற்கில் குமரன் குடியமர் மணியர்
பதி எனும் குறிச்சியோ பல்முனைச் சிறப்புகள்
பெற்ற திருப்பதி! பெயர் குறிப் பிட்டதும்
அறிவர் தமிழர் அனைவரும் அதன் புகழ்!
கல்வியிற் சிறந்தோர், கன தனவான்கள்,
பக்தி மார்க் கத்தைப் பரப்பும் சான்றோர்,
உத்தமர் பல்லோர் உதித்த நல் லூர் அது!
அத்தகை நலம் மிகும் ஆரூர் தன்னில்
தொல்குடி சார்ந்த தொடர் மரபுயர்ந்த
நல்குடிப் பிறந்து நாமம் துலக்கிய
தில்லையம் பலத்தைத் தெரியா தவர் இலர்!
தில்லை யம்பலம் செய்த பாக் கியத்தால்
தேவியாய்ப் பெற்ற திருமதி பெயரும்
"பாக்கியம்" என்றே பவிசாய் அமைந்தது!
இருவரும் கூடி இனிதே நடத்திய
இல்லறம் கனிந்த நல்லறப் பயனாய்ப்
பெற்ற பாக் கியங்கள் பெண் மக்கள் ஐவர்!
சாவித் திரி, நவ மணி, மனோன் மணி எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரின் பின்னே புவனேஸ் வரியும்
மகேஸ்வரி என்னும் மங்கையும் பிறந்தனர்!
பஞ்ச கன் னியரில் விஞ்சிய திறனார்
புவனேஸ் வரியோ பொற் குண நல்லாள்!
கொக்குவில் இந்துக் கல்லு ரியிலே
இளமையிற் கல்வியைச் சிலை மேல் எழுத்தாய்க்
கொண்டவள், இசைத் துறை, விளையாட் டுத் துறை,
சமயத் துறை எனச் சகலதும் கற்றாள்!
கல்வியும் இசையும் சமயமும் இணைந்து
விளையாட்டுத் துறை சார்ந்தே இசைந்த
காரணத் தாலே போலும் அவ் வனைத்துத்
துறையின் ஆ தாரச் சுபாவமும் இயலும்
குண நலம் யாவும் குதிர்ந்த முழுமைப்
பெண்மை நிறைந்த பெருமகளாக
வளர்ந்தனள்! வளரும் பருவப் போதிலும்
இறை பக்தியிலும் இசைத் தேவாரத்
திருவா சகப் பா ராயண மொழிவிலும்
கந்த சஷ்டி, நட ராஜர் பத் தென வரும்
திவ்விய பனுவல்கள் தினந் தொறும் உருகி
பாடிக் கனியும் பண்பிலும் ஊறித்
திளைத்தனள்! அந்தத் திருவளர் கன்னியை,
உற்ற பருவம் முற்ற வருகையில்
பெற்றோர் திருமணப் பேற்றினிலே கரை
ஏற்ற விழைந்தனர்! இருபத்து மூன்றாம்
வயதில், செல்வியின் வளைக் கரம் பற்றிய
இராசா கார்த்தி கேசனின் நலமும்
சாற்றுதற்கரிய சந்ததிச் சிறப்பு
மிக்கது! நவாலியூர் மேன்மைக் குடியிலே
முதலியார் மகேசன் வீதியில் வசித்த
கந்தையா மகன் இராசா என்றால்
கண்டறி யாதவர் களும் அறி நாமன்!
செல்வரத் தினம் எனும் திரு மிகும் மங்கையை
இராசா மணந்து தன் இளவர சாகப்
பயந்த கார்த்தி கேசெனும் பைங்குணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வங்கியில் ஏற்றப் பதவியில்
இருந்தவன்! அவனை இருந் தவப் பேறாற்
கணவனாய்ப் பெற்ற காரிகை, இனிதே
இல்லறம் நடத்தி எளிமை வாழ் வோம்பிப்
பெற்ற பிள் ளைகளும தாய் வழித் தொடர்ந்த
ஐவரே! ஆயினும் ஆண்கள் முதல்வனும்
கடைக்குட் டியுமாய் இருவர்! பெண்கள்
இடைப்படு மூவர்! விமல்ராஜ் மூத்தவன்!
பிரேமிளா, ரஞ்சனா, ஜெசிந்தா, மகள்மார்!
இளையவன் ஜெகராஜ்! இவர்களைப் பெற்றிகள்
பேணி வளர்த்துப் பெருமைகள் ஊட்டும்
வாறுரு வாக்கிய மாட்சிமைக் கெல்லாம்
புவனேஸ் வரியே பொறுப்பெனக் கணவர்
கனிந்து கனிந்து கதை கதையாகச்
செப்பிய வியப்பதைச் செவி மடுப் போர்கள்
புவனேஸ் வரியைப் போற்றிடு வார்கள்!
தாயின் நெறி மிகும் தாபரத் தாலே
வித்தைகள் தேர்ந்த விமல் ராஜ் முதல் மகன்
லண்டனில் இன்று லௌகிகச் சிறப்புடன்
சசிகலா மனைவி சகிதம் ஏக
புத்திரியாம் ஸ்ரீ புவனா என்னும்
செல்வ மகளைச் சீராய்ப் பெற்று
வாழ்கிறான்!" அடுத்த மகள் பிரேமி ளாவும்
லண்டனில்! ஸ்ரீ ரவீந்திரன் என்னும்
நல் மகனோடே இல்லறம் நடத்தி
அருணன், கிஷானி எனும் இரு திரு
மக்களைப் பெற்று மகிமையாய் வதிகிறாள்!
நடுமகள் நாயகி ரஞ்சனா மீதோ
படு படு பாசப் பரிவினால், அவளைச்
"சூட்டி" என் றே பெயர் சூட்டி அழைத்துப்
பேணி ஆளாக்கிப் பெரியவள் ஆனதும்
ஜீவ காந்தனின் திருமதி ஆக்கினாள்!
"சூட்டி" யும் கணவனும் அஜேன் எனும் பேரனும்
மட்டுமே லண்டன் மாநகர் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அவள் இறுதி மரணச் சடங்கில்
கலந்து கொள்ள காலம் வாய்த்தது!
ஜெசிந்தா, ஜெகராஜ், இருவரும் வாழ்வில்
"பசுந்தாய்" வாழப் படிகளைப் பசும் தாய்
அமைக்கும் வேளையில் அகாலக் காலன்
புவனேஸ் வரியை, புண்ணிய தேவியை,
கண்ணிய வதியைக் கவர்ந்து சென்றானே!
குமரக் கடவுளைக் கும்பிட் டென்றும்
கந்த சஷ்டிக் கவசம் தினந் தொறும்
ஓதி வணங்கிய உத்தமி உயிரைச்
சூதினா லே எம தூதர்கள் பறிக்க
எப்படித் துணிந்தனர்? எப்பொழுதும் ஸ்ரீ
சாயி பாபாவின் பஜனைகள் பாடித்
தீவிர பக்தியில் திளைத்த சீ மாட்டியை
நெருங்கவும் காலன் நெஞ்சம் துணிந்ததை
நம்பவும் கூடுமோ? நமனையும் "வாடா!
உட்கார் இப்பிடி! உணவுண்டு போகலாம்! "
என்றே வரவேற் றிருத்தி விருந் தோம்பும்
பண்பின ளைப் பயல் பசியா றினனே!
ஆமாம்! உறவினர், அந்நியர் என்று
பாரா மலுக்குப் பதிவிடம் தேடி
வரும் அனைவரையும் "வருக" என் றன்பாய்
உபசரித்து அமர்த்தி, உணவும் உறையுளும்
தானமும் அளித் தொரு தங்கு மடமாய்
வீட்டினைத் தர்ம கோட்டமாய் நடத்திய
நாச்சியார் வஞ்சக நமனின் தந்திரச்
சூழ்ச்சரை எப்படிச் சுதாரித் தறிவாள்-?
"எதுபுவனக்கா இல்லம்" என் றெவரும்
கேட்டுக் கேட்டுச் "செல்வர்க் கழகு
செழுங் கிளை தாங்குதல்" எனும் முது மொழிக்குச்
சான்றாயித் திகழ்ந்தவள் சரனா லயத்தை
நாடி வருவரே! நாளை முதல் அந்
நாதி அற்றோர்க்கெலாம் நடுத் தெருவே கதி!
இதய வீக்கம் எனும் ஒரு புது நோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதையிலே உன்னைச் சேர்த்ததாம்! ஐயகோ!
அதய விசாலம் எனும் பெருங் கருணை
நோய் அன்றோ உனை யடக்கிற் றம்மா?
தன் துயர் எல்லாம் தனக்குள் அமுக்கி
இன்முகம் பூக்கும் புன் சிரிப் பொன்றே
ஆ பரணமாய் அணிந்து, உறவினர்கள்
குடும்பப் பிரச்சசனைத் துன்பங் களைத் தன்
தலையிற் சுமந்து தக்க விதத்திலே
தீர்த்து வைத்த செம்மனத் தேவி!
ஆயினும் பிறர் தனக்கு அறிவுரை கூறவோ,
தனக்கு அனு தாபம் காட்டவோ, தன் மீது
அதிகாரங்கள் செய்யவோ முனைந்தால்
அதற்கிடம் கொடாத ஆளுமை மிக்கவள்!
ஆண் உடன் பிறவா அரிவை என் பதனால்
ஆண்மையும் அவளுக்கு அணிகலன் ஆச்சோ?
மென்மையும் உறுதியும் சமன் எடை எடுத்துப்
பெண்மையும் ஆண்மையும் பிணைந்த நம் ஈசன்
கலந்து மாதரசியைக் கடைந்துரு வாக்கினான்
என்பதில் ஐயமே இல்லை! இறைவன்
எல்லாம் அறிந்தவன்! எனவே, புண்ணியப்
பொன்மனத் தேவி புவனேஸ் வரியைத்
தன் உறைபதியில் தன் அருகிருத்திச்
சத்தியம் சத்தியமாக –
நித்திய சாந்தி நிலை பெறச் செய்வான்!

**கணவர் கார்த்திகேசு இரங்கல்**

ஒப்பற்றவாழ்க்கைத் துணைவிக் குதாரணமாய்,
முப்பத்து மூன்றாண்டென் மோட்சமாய், – தப்பெல்லாம்
கண்டும் காணாமல் எனைக் கண்காணித் தே குடும்பத்
தொண்டுகளை எல்லாம் உன் தோளேற்றுக் – கொண்டெனக்கும்
தாயாய்த் தலைவியாய்த் தாதியாய் வாய்த்தவளே!
காயாய்க் கிடந்தேன்! கனிவித்து – நோயாகிப்
போகின்ற போதெனக்காய்ப் பூசனைகள் கோயிலெங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகிப் புரிந்தென் இடர் தீர்த்துச் – சோகித்த
போதெல்லாம் மாறா உன் புன்னகையால் மாற்றி, வந்த
தீதெல்லாம் எம் மனையைத் தீண்டாமல் – நீ தென்றற்
காற்றாய்ப் புயலைக் கலைத்தெம் குடும்ப வள
ஊற்றாய்த் திகழ்ந்தாய்! உனை இழந்து – கீற்றாய்ப்
பிளந்து விழுந்த மர மானேனே, பேதை,
குழந்தைகளுக் கென்ன நான் கூற? – வளர்ந்து விட்ட
காரணத்தால் நெஞ்சம் கலந்தவரோடே பேசிச்
சீரணிக்க மாட்டாமல் தேம்புகிறேன்! – பூரணியே!
உன்னி உன்னி உன்னை நினைந் தொவ்வார் கணமும் நான்
துன்னுகிறேன்! அஃதே துணை!

## மகன் விமல்ராஜ் இரங்கல்

மூத்த மகன் என்னை முத்தாய்ப் பரிமளிக்க
வார்த்து வளர்த்து வளமெல்லாம் – சேர்த்தவளே!
வந்துனை ஈற் றிற் காண வாய்ப்பிழந்தேன்! சேய்க் கடனை
எந்த விதம் தீர்ப்பேன் இனி?

## மகள் பிரேமிளா இரங்கல்

மகள்மாரில் மூத்தவளே மாதாவுக் கென்றும்
இக வாழ்வில் ஆதாரம் என்றே – சக மாந்தர்
சாற்றுவார்! அந்தத் தவம் இழந்து போனேனே!
தேற்றுவதார் என்னை இனி? சீ!

## மகள் ரஞ்சனா இரங்கல்

"சூட்டி" என்றுன் வாய் நிறையக் கூப்பிடுவாய்! என்னை நிதம்
பாட்டி என்று கூப்பிட என் பைங்கிளியைக் – கூட்டி வந்தும்
பேரனைப் பார்க்க முன்பே பேதலிக்க விட்டாயே!
சோரம் என்ன செய்தேன் நான்? சொல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகள் ஜெசிந்தா இரங்கல்

நான் பிறந்த போதுன் நயனம் சொருகியதாம்!
ஏன் பிறந்தேன் என்றின் றிரங்குகிறேன்! – வான் பிறந்த
வெண்மதி போல் என்றும் விளங்கி எனை நடத்து! என்
கண்மணியாய் என்றும் கமழ்!

### மகன் ஜெகராஜ் இரங்கல்

கொள்ளி வைக்க வந்த கொடும் பாவி என்னை நீ
பள்ளி வைத் தெல்லாம் படிப்பித்தாய்! – துள்ளித்
திரிகின்ற என்னைத் துயரிலே மூழ்கப்
புரிகின்றார்! நீ என் புதிர்!

### சகோதரிகள் நவமணி, மனோன்மணி, மகேஸ்வரி இரங்கல்

அண்ணன்மார் தம்பிமார் அற்ற குடும்பத்தில்
பெண்ணாய்ப் பிறந்தும் பெரும் குடும்ப – வண்ணச் சீர்ச்
சாதனைகள் யாவும் சமர்த்தா நிறை செய்த
சோதரியே! நீ எம் சுடர்!

### மருமக்கள் சசிகலா, ஸ்ரீ ரவீந்திரன், ஜீவகாந்தன் இரங்கல்

மாமி என்றுன்னை மருமக்கள் சொன்னாலும்
பூமி நிகர் உன் போல் பொறை மிக்க – மாமியரைக்
கண்டறியோம் உந்தன் கனிவெமக்கெம் தாயரிடம்
தின்றறிந்த சாரத் திறம்!

### பேரப் பிள்ளைகள் ஸ்ரீ புவனா, அருணன், கிஷானி, அஜேன் இரங்கல்

பாட்டி! எனக்குப் பல பாட் டுகள் பாடிக்
காட்டிக் குதூகலங்கள் காண்பிக்கத் – தீட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தோமே எத்தனையோ திட்டங்கள்! ஏன் நீ
வருந்த எமை விட்டு மறைந் தாய்?

மேற்றும்

புயலும் தென்றலும் போரும் அமைதியும்
எரிமலைக் குமுறலும் இன் மழைச் சொரியலும்
மாறி மாறி வருவதே இயல்பாய்க்
கொண்ட இவ் வையகக் கோட்பாடுணர்ந்தும்
அறிந்தும் கொண்ட எம் ஆன்றோர் "ஆசைப்
பற்றை அறும்" எனப் பகன்றார்! ஓமோம்!
"ஆசை அறுமின், ஆசை அறுமின்,
ஈசனோடாயினும் ஆசை அறுமின்!"
என்றே சித்தர் இயம்பிய சொற்றொடர்
என்றும் போற்றி! இழப்பென் றொன்றும்
இல்லை என்கின்ற இரகசியம் தேர்வோம்!
சில்லையூர் செல்வ ராசனின் தத்துவச்
செம்பொருள் தேரீர்! தேர்ந்தால் –
அம்புவி அனைத்தும் அடங்கும் உம் அகத்தே!

ஆக்கம் சில்லையூர் செல்வராசன்

## "பிரிவு எனும் துயர் வாட்டுதம்மா எம்மை"

அன்பின் இருப்பிடமாய் அறிவின் வதிவிடமாய்
உண்மையின் உறைவிடமாய் நேர்மையின் இலக்கணமாய்
இறையன் பின் வாழ்ந்தீர் இனியவளே புவனா!
கள்வன் வந்து களவெடுக்க கனவு காண
கதிரவன் வரமுன் கதிர் அத்தான் சொன்ன செய்தி
கேட்டு கலங்கியது அறிவாயோ!
பாவியுனை பறிகொடுத்து பாரினிலே பரிதவிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவானின் பாவைகள் நாம் உனை பார்க்க முடியவில்லையே
புவனா!

காலனை கண்டவுடன் கணவனை கூட மறந்து
கண்ணை மூடி விண்ணுலகம் சென்றீரே
கார்த்தி வந்து கத்தி குழறி கண்ணீர் வடித்தும்
கதைக் காமல் துயில் கொள்ள எப்படி மனம் வந்ததம்மா

/உடன் பிறப்பைப் போலெம்மை மதித்து புத்தி கூறி
எக்குறையும் வராது அடிக்கடி பக்க பலம் தந்துதவ
உமைப் போல ஊட்ட உலகில் எவருளரோ
என்னக்கா செய்வோம் இனி?

பரிவோடு அணைத்திட்ட பாச நினைவலைகள்
எத்தனை யுகம் போனாலும் இதயப் புண் ஆறிடுமா?
மாறாது மாறாது மறைந்திட்ட உன் நினைவு
வாராயோ வாராயோ வந்து இன்பம் தாராயோ புவனா

உன் நினைவால் ஏங்கி உன்பிரிவால் வாடி
இறைவனையே பிரார்த்திக்கும்

புஸ்பராஜா குடும்பம்
(கொக்குவில்)

## மாதர் குல மாணிக்கம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய அரூர் கேட்டாள்
பெயர்த்து பவனுக்கே பிச்சி யானாள்
அன்னை யையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றாளகலிடத்து ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கேட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்து நான்காவது சக்தி பீடமாகிய புவனேஸ்வரிப் பீடம் என்று அழைக்கப்படுவது நயினை நாகபூஷணியின் திருவருட் பீடம். அன்னையின் கருணையால் யாழ்ப்பாணத்தில் கொக்குவில் என்ற இடத்தில் மணியர் பதிப் பகுதியில் அவதரித்தார் திருமதி. கார்த்திகேசன் புவனேஸ்வரி. இவர் மாதர் குல மாணிக்கம்.

மாணிக்கத்திற்கு மதிப்பு போட முடியாது. அதனைப்போல் மாதரில் மாணிக்கமாகப் பிறப்பவர்கள் உலகில் யாவராலும் போற்றிப் புகழப் படுகின்றனர். பெண்ணுக்கு அணிகலமாக விளங்கும் கற்பு, பொறுமை, தாய்மை, விருந்தோம்பல் போன்ற பண்புகளை ஒருங்கே பெற்று, மாதர்குலத்தின் மாணிக்கமாய்த் திகழ்ந்து குத்துவிளக்கேற்றி குலம் போற்ற வாழ்ந்தவர். இன்று எம் அனைவரையும் துன்பக்கடலில் தவிக்கவிட்டு மங்காத சோதியாய் விண்ணுலகத்திற்கு சென்று விட்டார். இவர் அண்மைக் காலத்தில் மங்கல வைபவங்கள் அனைத்திலும் மலர் சூடி மஞ்சள் குங்குமத்தோடு திருவிளக்கேற்றி காட்சிகள் என் கண்களை விட்டகலவில்லை. தன் கணவருக்கு விரும்பிய சுவையான பண்டங்களைச் சமைத்து அவர் வரும்வரை காத்திருந்து, அவர் அருகே இருந்து உணவைப்பாமாறி, அதன்பின் தான் சாப்பிட்டு பத்தினியாய்த் திகழ்ந்தார். எந்த விடயங்களிலும், பொறுமையைக் கடைப்பிடித்து வீட்டிற்குவரும் விருந்தினரை முகமலர்ந்து வரவேற்று தன்பக்கத்தில் இருந்து விருந்துபசாரம் செய்த நற்பண்புடைய குலமகள். தான் பெற்ற பிள்ளைகளை நற்கல்வி பயிலுவதற்காக தன்னையே அர்ப்பணித்த தாயென்றால் மிகையாகாது. தன் பிள்ளைகளுக்கு நோய்கள் வந்த நேரங்களில் அன்பு வார்த்தை கூறி அரவணைத்து தூக்கமே இல்லாமல், தன்னை அர்ப்பணித்து தனக்கு நோயையும் தேடி, அதனை மற்றவர்களுக்கு காட்டாமல் சகித்திருந்தார். இப்பேற்பட்ட பல பண்புகளை அணிகலனாய்க் கொண்டு தன்னை மாலையிட்ட கணவனையும், தன் அன்புப் பிள்ளைகளையும் மறந்து தான் பெற்ற பூவையும், மஞ்சள் குங்குமத்தோடு தன் கணவனால் வழங்கப்பட்ட கூறையும் உடுத்தி, அவருடைய கைகளால் அணிவித்த பொலிவுறு தாலியுடன், மண்ணுலகை விட்டு, விண்ணுலகிற்குச் சென்று விட்டார். தன்னைக் கட்டிய கணவன் இருக்க கட்டையேறுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களில் பாக்கியம் பெற்றவர்களுக்கே கிடைக்கும் பெரும் பேறு. இவ் அன்புத் தெய்வம் நயினை நாகபூஷணியின் புவனேஸ்வரி பீடத்தில் அமர்ந்து எம்மைக் கடைக்கண்களால் ஆதரிப்பாள் என்ற நம்பிக்கை உண்டு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்னை நாகபூஷணியை இருகரம் கூப்பிப் பிரார்த்திக்கிறேன்.

சாந்தி

இங்ஙனம்
அன்புருகி நிற்கும் தம்பி
க. கனகரெத்தினம்
நயினை.

## தேவாரம்

நாமார்க்குங் குடியல்லோ நமனைஞ்சோ
நரகத்தி லிடாப்பபடோ நடனல் யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மினபே யெந்நாளும் துன்பமில்லை.
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்காணற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமேன்று மீளா வாளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியணையே குறுகினோமே.

## திருவாசகம்

இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்
என்பு உருக்கி
கரும்பு தரு அவை எனக்குக்காட்டினை உன்கழல்
இணைகள்
ஒருங்குதிரை உலவு சடை உடையானே நரிகள் எல்லாம்
பெருங்குதிரை ஆக்கிய ஆறு அன்றேஉன்பேர். அருனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி பாடல்

சின்னஞ் சிறிய சிங்காரப் பாதம்
நளின நடை பயில வந்திடும் பாதம்
பாந்தியிலே விளையாடிய பாதம்
பரதன் ஸ்ரீ சத்ய சாயிசன் பாதம்
அடிமேல் அடிவைத்து அசைந்து வரும் பாதம்
வருடித் தொழுமுன் வந்து நின்றிடும் பாதம்
அன்புடனே ஒரு கணம் நினைத்தாலே
எங்கிருந்தாலும் ஓடோடி வரும் பாதம்.

## திருவிசைப்பா

தில்லையம் பலத் தெங்கள் தேவதேவைத்
தேறிய அந்தனர் சிந்தை செய்யும
எல்லையதாகிய எழில் கொள் சோதி
என்னுயிர் காவல் கொண்டிருந்த எந்தாய்
பல்லையார் பசுந்தல் யோடிட்றிப்
பாத மென் மலரடி நீ போய்
அல்வினில் அருநடத் ஆடிலெங்கள்
ஆருயிர் காவலில் கரிதுதானே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலிய சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற உமைமன வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா !நீ ஆடும் போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்.


## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளை யோனே கதிர்காமப் பெருமாளே


## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தணிவேல் வாழ்க
குக் குடம் வாழ்க செவ்வோர்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்க வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

01.03.1993ல் இறைவனடி சேர்ந்த எமது இல்லத் தலைவியாகிய

புவனேஸ்வரி கார்த்திகேசன் அவர்களின் ஈமக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமக்கு ஆறுதல் கூறி அனுதாபங் காட்டியவர்கனுக்கும் மற்றும் தேவையான உதவிகளை முன்னின்று செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

கணவன்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

20, இன்னார் பெயாலைன் றோட்

தெகிவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By UNIE ARTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org